**மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மிருககாட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 27 (அ) பந்தியின் பிரகாரம் நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆரம்ப மற்றும் இறுதிக் காசு மீதியில் சீராக்கியதால் மொத்த தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 48,900,380 காசு வெளிப்பாய்ச்சலாக இருந்த போதிலும் அந்த முறையில் சீராக்கப்படாமல் சகல செயற்பாடுகளிலிருந்தும் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 98,156,637 காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 49,256,257 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 110,782,203 ஆன நிலையான சொத்துக்களின் வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 111,195,429 ஆக ரூபா 413,226 அதிகரித்து செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வருடாந்த இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | குறுக்குப்பதிவு மற்றும் திறைசேரி நிதி மாற்றும் போது சகல பிரிவுகளும் சீராக்கி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் உள்ளடக்காமல் காசுப்பாய்ச்சல் கூறறு தயாரிக்கப்படாதிக்குமாயின் சரியாக சீராக்குவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் | 2023 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் | இந்த வேறுபாடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரி வைப்புக் கணக்கின் மீதிக்கும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மிருகக்காட்சி சாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் வைப்புக்கணக்கின் மீதிக்கும் இடையே பலவருட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 32,484,882 வேறுபாடு தொடர்பாக கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட திரண்ட நிதியத்தின் மீதியிலிருந்து குறைத்து திறைசேரிப் புத்தகங்களுடன் மீதிக்கு சமனாக்கிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | போது இந்த வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள காசேடு சமப்படுத்தப்பட்டுள்ளது. | தொடர்பாக கண்டறிந்து தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நினைவுச்சின்ன விற்பனை சாலையில் மீளாய்வாண்டில் நினைவுச் சின்ன விற்பனை மற்றும் ரீசேட் விற்பனையில் உழைத்த வருமானம் 63,520 மற்றும் அதன் விற்பனைக் கிரயம் ரூபா 1,012,931 ஆனமையால் ரூபா 949,411 நட்டம் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய இலாப நட்டக் கணக்கில் விற்பனை ரூபா 52,320 மற்றும் விற்பனை கிரயம் 52,320 ஆக குறிப்பிடப்பட்டு இலாப நட்டம் அல்லாத நிலைமை குறிப்பிடப்பட்டமையால் நிதியத்தின் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 949,411 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | விற்பனை வருமானம் மற்றும் விற்பனைக் கிரயம் என்பவற்றை சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 976,986,019 மற்றும் மொத்த செலவினம் ரூபா 1,164,622,896 ஆனமையால் வருமானத்தை மிஞ்சி செய்யப்பட்ட செலவினம் ரூபா 187,636,877 ஆகும். இந்த முறையில் தொடர்ச்சியாக வருமானத்தை விஞ்சிய செலவினம் செய்யப்பட்டமையால் நிதியத்தின் மீதி குறைவடைந்து சென்றதுடன் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 | மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்கு வருகைதருகின்ற பார்வையாளர்களின் எண்ணிக்கை விரைவாக வீழ்ச்சியடைந்தமையினால் நிதியத்தின் வருமானம் குறைவடைந்திருந்தது. இதன் காரணமாக திறைசேரி நிதியத்தின் மீதியில் நிதி பெறப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் நிதியத்தின் வருமானத்தில் | வருமானத்தை அதிகரிப்பதற்கும் சரியான வகையில் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டு வரையில் நிதியத்தின் மீதி ரூபா 995.15 மில்லியனால் அதாவது 34 சதவீத அளவினால் குறைவடைந்துள்ளது. | அதிகரிப்பு காணப்படுகின்றமையால் செலவின முகாமைத்துவம் செய்யக்கூடியதாக உள்ளது. | |

**1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.7.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறைப் பொறுப்பின் கிழ் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதி ரூபா 340,982 மற்றும் நியதிச்சட்ட வைப்பு மீதி ரூபா 112,592 என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பான தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 187,636,878 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 429,958,380 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 242,321,502 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நுழைவுச் சீட்டுக்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையும், வருகை தரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து சென்றமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 66 மில்லியன் செலவினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 136 வெளிநாட்டு பறவைகளைக் காட்சிப்படுத்துவதற்காக அம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் நிர்மாணிக்கப்படுகின்ற பறவைகள் சரணாலயத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 18.8 மில்லியன் வரையில் செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 57 பறவைகள் காட்சிப்படுத்தப்படாமல் சபாரி பூங்காவில் ஏனைய கூடுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. | தெஹிவளை மிருகக்காட்சி சாலையிலிருந்து கோரப்பட்ட 72 பறவைகள் தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தது. சபாரி பூங்காவில் தரித்து வைக்கப்பட்டுள்ள 57 பறவைகளையும் காட்சிப்படுத்த முடியாமைக்கு அந்த பறவைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட வெளிநாட்டு பறவை சரணாலயம் மற்றும் செல்லப் பிராணிகள் வலயத்தில் பறவைகள் அரண் பூர்த்தி செய்யப்படாமையே காரணமாக இருந்தது. | கணிசமான செலவினத்தைச் செய்து பறவைகளை கொள்வனவு நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்த பறவைகளைக் காட்சிப்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கும் அந்த பறவைகளை பாதுகாப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 25.7 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் தெஹிவளை மிருககாட்சி சாலையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட 04 பணிகள் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அதில் அத்தியாசிய பணியான ரூபா 4.2 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் திணைக்களத்திற்கு இணையத்தள பக்கம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் ரூபா 0.5 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் மிருகக்காட்சி சாலையில் CCTV கமரா முறைமை ஒன்றை ஸ்தாபிக்கும் பணிகள் பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 0.5 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக இருந்தது. | ரூபா 25.70 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் அத்தியாசிய CCTV கெமரா சிலவற்றை பொருத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது . கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் மின்சார வேலி நிர்மாண வேலை செயற்திட்டமும் நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. | தேவையினை இனங்கண்டு உரியவாறு திட்டமிட்டு வேலைத்திட்டம் ஒன்றின் ஊடாக பணிகளை அமுல்படுத்துவதற்கும் புறக்கணிப்புக்களின் போது திட்டங்களைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் அமைக்கப்பட்ட பாலைவன வலையத்தில் (Desert Zone) சுவரில் வேலை நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த வேலை நடவடிக்கைகள் காலந்தாழ்த்தப்பட்டிருந்ததுடன் ரூபா 4.84 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் CCTV கமரா முறைமையொன்றை ஸ்தாபிக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பூங்காவின் எல்லையைச் சுற்றி மின்சார வேலி ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 12 மில்லியன் நிதியேற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகளும் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி கிடைக்காமையினால் நிறுவனத்தின் பாதுகாப்பு போன்ற அத்தியாவசிய செயற்திட்டத்திற்காக முன்னுரிமை வழங்கி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. CCTV முறைமைக்காக திட்டங்கள் தயாரிப்பதற்காக பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | தேவையினை இனங்கண்டு உரியவாறு திட்டமிட்டு வேலைத் திட்டங்கள் ஊடாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் புறக்கணிப்புக்களின் போது திட்டங்களை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பின்னவல யானைகள் சரணாலயத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 29 மில்லியன் | யானைகள் சரணாலயத்தின் நிலத்தை அலங்காரப்படுத்தல் மற்றும் தியகம இரண்டு | தேவையினை இனங்கண்டு உரியவாறு திட்டமிட்டு |

| | | |
|---|---|---|
| நிதியேற்பாட்டில் 62 சதவீதமான ரூபா 18 மில்லியன் யானை சரணாலயத்தின் நிலத்தை தயாரித்தல் மற்றும் பாரத்தை நிறுக்கும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இரண்டு பணிகளும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ரூபா 2.5 மில்லியனின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தியகம பாம்ஹவுஸ் பழுதுபார்த்தலின் பௌதீக செயல்முன்னேற்றம் 05 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மாடிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் 2023.09.20 ஆந் திகதி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டமையால் திட்டங்கள் தயாரித்து பெறுகை நடைமுறைகளின் கீழ் மேற்கொள்வதற்கு போதியளவான காலம் காணப்படவில்லை. | வேலைத்திட்டங்கள் ஊடாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் புறக்கணிப்புக்களின் போது திட்டங்களை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்காக தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு ரூபா 7,982,747 பெறுமதியுடைய மருந்துகளை கொள்வனவு செய்யும் பெறுகைகளின் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2, 4.2.3 மற்றும் 5.3.10 பிரிவுகளின் பிரகாரம் முறையான பிரகாரம் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்படாதிருந்ததுடன் 91 நாட்கள் ஆக இருக்க வேண்டிய கேள்வி செல்லுபடிகால எல்லை 230 நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது. | 2022/2023 ஆம் ஆண்டுகளின் போது மருந்துகளைக் கொள்வனவு செய்யும் போது கேள்வி மதிப்பீட்டிற்காக நீண்டகாலம் எடுத்திருந்தது. ஏதிர்காலத்தில் அவ்வாறு காலம் எடுக்காமல் விரைவாக அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு பரிந்துரை பெற்றுக்கொள்ளுமாறு தொழில்நுட்ப குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |